**அ.வ.எண்.215/2023**
**பி.வா.சா.1 : நகுல்சாமி**
**தேதி : 16.02.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

தாவா 1வது அயிட்ட சொத்து என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்து ஆகும். தாவா 2 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் 02.09.2009 ஆம் ஆண்டு உங்கள் தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன சொத்துக்களும் தாவா சொத்துக்கள் அனைத்தும் நீங்களும் உங்கள் தகப்பனார், வாதி சேர்ந்து தான் அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரி திருமணம் செய்த ஏமூருக்கும் தாவா சொத்து அமைந்துள்ள இடத்திற்கும் சுமார் 5 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். நீங்கள் சொல்வது தவறு என்றும் திண்டுக்கல் ரோடு தான் தாவா சொத்தையும் வாதி குடியிருக்கும் இடத்தையும் பிரிக்கிறது என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் 1993 ஆம் ஆண்டு இறந்தவிட்டார். என் தகப்பனார் 10.01.2023 ஆம் தேதியில் இறந்துவிட்டார். உங்கள் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் உங்களுக்கும் உங்கள் தகப்பனாருக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொண்டீர்களா என்றால் இல்லை. உங்கள் தாயார் இறந்த பிறகு தாவா சொத்தை வாய்மொழியாக பிரித்துக்கொண்டதால் அதற்கான ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. நான் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடனை தாவா

சொத்தின் அனுபவித்தில் இருந்து தான் வாங்கினேன். வாதியிடமிருந்து தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் எப்பவும் வாதியும் பிரதிவாதியும் ஒன்றாக கூட்டு சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்து வாரிசு உரிமை சட்டப்படி வாதிக்கு தாவா சொத்தில் பாக உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு சரிபாதி பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.16 17:48:16 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.